முருகப்பெருமான் துணை

**மகான் தேரையர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.05.2022, வியாழக்கிழமை

1. தவபலம் கொண்டு உலகினை
தனிப்பெருஞ் சக்தியாக மாற்ற
அவதாரம் புரிந்த அரங்கனே
ஆற்றல்மிக்க உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தகர் திங்கள்
குறைவிலா இருபானீர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 22 ம் நாள், 05.05.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு தேரையர் யானும்
3. யானுரைக்க அரங்க ஞானியின்
ஞான வழிகளை ஏற்றவர்க்கு
தானதர்ம சிந்தை பெருகி
தன்பிறவிப் பயனை அடையநேரும்
4. நேருமை கொண்ட வாழ்வும்
நீதி குன்றா செயல்பாடும்
வறுமை பிணி சோடை யிலா
வளமான நிலையும் வளர்ச்சியும் காண
5. காணவே அரங்கமகானின்
கருணை பார்வைக்கு வர
ஞானமாகத் தரும் சன்மார்க்கம் மேல்
நம்பிக்கை வைத்து பின்தொடர
6. தொடர தீவினை பற்றாதபடி
தேசிகன் தேற்றும் ஞானவான்களாக
இடரே அனுகா பாதுகாப்பும்
எக்கணமும் ஞானிகள் துணை கொண்ட
7. கொண்ட ஞானவான்களாக
குருவருள் கூடி உலகினில்
தொண்டு வழிச் சிறந்துமே
தேசிகன் தேர்வு செய்தநல்
8. செய்தநல் ஞானிகள் ஆவர்
சிறப்பான உலகை படைக்கும்
அய்யன் ஞானப்படைகளில்
அங்கத்தினராகி உலகோர்
9. உலகோர் அனைவரும் ஞானியாகி
உலகமாற்றம் தனை புரிவர்
பழக்க வழக்கங்கள் யாவுமே
பரிபக்குவ நிலைகள் கூடி

10. கூடியே கலியினை வெல்லும்
குருபரன் ஆறுமுகன் ஆசி
கூடியே அனைத்திலும் சிறப்பர்
கும்பமுனி தலைமை கண்ட

11. கண்ட ஞானிகள் அனைவரின்
கருணையும் காட்சியும் ஆசியும்
தொண்டுவழி கூடித் தேறுவர்
தெரிவித்த அருளாசி முற்றே

–சுபம்–